**பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி - 2015**

பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 05 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பதவிநிலைக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் 07 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றின் நியாயமான பெறுமதி அதன் முகப்புப் பெறுமதியிலிருந்து கருத்தில் கொள்ளக்கூடியளவு வேறுபடுமானால் இன்னுமொரு மீள்மதிப்பீடு அவசியமாகும். நியாயமான பெறுமதி கருத்தில் கொள்ளக்கூடியளவிலும் உடனடி வேறுபாடுகள் ஏற்படும் போதும் வருடாந்த மீள்மதிப்பீடொன்றும், கருத்தில் கொள்ளக்கூடியளவிலில்லாத வேறுபாடுகள் மாத்திரம் இருக்கும் போது மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு போதுமாக இருந்த போதிலும், பதவிநிலைக் கல்லூரியின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன 2010 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்து அதன் அதன் நியாயமான பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

ரூபா 3,057,824 கிரயத்திலான 02 எரிபொருள் அளவீட்டு உபகரணங்கள், 02 இயந்திராதிகளின் கீழ் 12.5 சதவீதப்படி வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து அது கட்டிடத்தின் கீழ் 2 சதவீதப் படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது பதவிநிலைக் கல்லூரிக்கு இலங்கை தரைப்படையால் வழங்கப்பட்ட எரிபொருளுக்காக ரூபா 6.08 மில்லியன் தொகை பொதுத் திறைசேரியால் இலங்கை தரைப்படைக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும், அப்பணத்தை செலுத்த வேண்டிய செலவினமொன்றாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை தரைப்படைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 73,860 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 சனவரி 01 ஆந் திகதி வரையில் முழுயைாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 51,690,915 கிரயத்திலான நடைமுறையல்லாத சொத்துகளுக்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 10,338,183 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2012 இன் 13 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி திருத்த அதிகாரச்சட்டம் | |
| (i) 17(அ) 3 ஆம் பிரிவு | சிவில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிரந்தர சிவில் நிர்வாக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 22 (2) ஆம் பிரிவு | பதவிநிலைக் கல்லூரியின் கணக்காளர் பதவிக்காக இலங்கை கணக்காளர் சேவைக்குரிய உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது வெற்றிடமான அப்பதவிக்கு 2016 சனவரி வரையிலும் இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தரொருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2013 யூன் 05 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் பீசீஎம்டீ/பீஆர்/2013 ஆம் இலக்க கடிதம் | கல்லூரிக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியொன்றும் 2 மோட்டார் சைக்கிள்களும் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு கல்லூரி வளவில் சிதைவடைந்து வருவதுடன் அவற்றை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 395 | வங்கி கணக்கிணக்கக் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 770 | பயன்படுத்தப்படாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பிரிவு | பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக்கூற்று, ஐந்தொகை மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பதவிநிலைக் கல்லூரியின் நிதி விளைவுகள் ரூபா 15,135,983

மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,251,729 பற்றாக்குறையாக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 18,387,712 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 22,444,476 இனால் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 2,017,213 ஆக காணப்பட்ட கல்லூரியின் பற்றாக்குறை 2012 ஆம் ஆண்டில் ரூபா 6,410,036 வரை அதிகரித்திருந்தது. 2013 ஆம் ஆண்டில் அது ரூபா 1,115,201 வரை குறைவடைந்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் ரூபா 3,251,730 வரை மீண்டும் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 முதல் 2014 வரை நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்று தென்பட்டதுடன் அது வருடாந்தம் தளம்பளடைந்து காணப்பட்டது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற்கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 53,113,923 ஆக காணப்பட்ட கல்லூரியின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டளவில் ரூபா 51,188,595 வரை குறைவடைந்திருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா 116,703,502 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

2008 இன் 05 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் யுத்த தரைப்படை உத்தியோகத்தர்களுக்கு பொருத்தமான நியமனங்கள், பதவி உயர்வுகளுக்காக அவர்களுக்குத் தேவையான தொழில்துறை அறிவினை வழங்குதல் மற்றும் கல்லூரியில் பயிற்சி பெறும் உத்தியோகத்தர்களின் கட்டளை மற்றும் பதவிநிலை செயற்பாடு ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களில் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்காக தயார்படுத்தல் கல்லூரியின் அடிப்படை நோக்கங்களாகும்.

அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதவிநிலை கல்லூரியின் வினைத்திறனான செயற்பாட்டிற்காக தேவைப்படும் பேராசிரியர் பதவி, விரிவுரையாளர் பதவி மற்றும் ஏனைய பதவிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) ஹெயியன்துடுவ இளைஞர் சேவை மன்றத்திற்குரிய 11 ஏக்கர் அளவிலான காணி 2011 ஆம் ஆண்டின் போது கல்லூரிக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய உரித்துறுதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இக் காணியின் பெறுமதி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்லூரியின் நடவடிக்கைகளுக்காக வருடக் கணக்காக பயன்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு அமைச்சு மற்றும் தரைப்படைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 51,586,500 கிரயத்திலான 33 மோட்டார் வாகனங்கள் 2016 யூன் 03 ஆந் திகதி வரையிலும் கல்லூரிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு மாணவ உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டில் கல்லூரிக்கு கிடைக்கப் பெற்றிருந்த பாடநெறிக் கட்டணத்தில் ரூபா 3 மில்லியன் பயன்படுத்தப்பட்டு நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டு கல்லூரியில் சேவை புரியும் சிவில் ஊழியர்களுக்கு இடர் கடன் வழங்குவதற்கு 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 யூன் 3 ஆந் திகதி வரை அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 வாகனப் பயன்பாடு

2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 5 மோட்டார் வாகனங்கள் பதவிநிலை கல்லூரியின் போக்குவரத்து தேவைப்பாட்டிற்காக வெளித்தரப்பினரிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. கல்லூரியால் குறித்த தரப்பினருடன் மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துதல் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக எழுத்துமூல உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக ரூபா 3,001,600 வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

பல்கலைக்கழகத்தின் மாணவர் மற்றும் உத்தியோகத்தர் விடுதிகளுக்காக 3 கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் இலங்கை விமானப் படைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. விமானப் படையால் வரிசை அமைச்சின் அங்கீகாரத்துடன் இந் நிர்மாணங்களிலிருந்து ஒரு கட்டிடத்திற்கான ஒப்பந்தமொன்றை தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 27,882,332 கிரயத்திற்கு 2012 திசெம்பர் 13 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரரின் செயற்திறனின்மையால் 2013 யூன் 26 ஆந் திகதி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட திகதி வரை ஒப்பந்தக்காரருக்கு ரூபா 7,172,473 செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணமான ரூபா 1,224,260 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இச் செயற்திட்டத்தின் எஞ்சிய நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 28,355,117 ஒப்பந்தமொன்றுக்கு வேறொரு தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந் நிர்மாணத்திற்காக ரூபா 35,527,590 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் ஆரம்ப ஒப்பந்தத்துடன் ஒப்பிடும் போது ரூபா 7,645,258 மேலதிக கிரயமொன்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலதாமதமொன்றும் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2016 மே 13 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் ஆண்டில் பதவிநிலைக் கல்லூரியால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கல்லூரியின் மூலதனச் செலவினம் மற்றும் நிலையான சொத்துக்களை கையேற்பதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்த்த செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவை மாணவ உத்தியோகத்தர்களின் கல்வி நடவடிக்கைகளை பேணிச்செல்வது உட்பட ஏனைய பிரதான நோக்கங்களுக்குரியதாக பிரயோகிக்கக்கூடிய முறை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

2012 இன் 13 ஆம் இலக்க பாதுகாப்புச் சேவை கட்டளை மற்றும் பதவிநிலைக் கல்லூரி (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பதவிநிலைக் கல்லூரியின் கட்டளை அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஆரம்ப கணக்கு மீதிகள், தவறுகளை சீராக்குதல் மற்றும் சீராக்க பதிவுகள் போன்றவற்றை பேரேட்டு கணக்குகளில் பிரதிசெய்வதற்குத் தேவையான நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரிப்பது தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.